RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22224

OPEN ACCESS

# தனிநிலைக் கோட்பாட்டில் தொல்காப்பியம்

ரா. பிரேம்குமார் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி-6200055, தமிழ்நாடு, இந்தியா.

# Individual Theory of Tholkappiyam

R. Premkumar [a, *]

[a] Department of Tamil, Srimad Andavan Arts and Science College (Autonomous), Thiruvanaikoil, Tiruchirappalli -620005, Tamil Nadu, India.

* Corresponding Author: prempHd88@gmail.com

Received: 22-01-2022
Revised: 08-03-2022
Accepted: 13-03-2022
Published: 29-04-2022

Check for updates

## ABSTRACT

There are many ancient language families in the world. Among them, the Dravidian language family is considered essential. The grammatical system and its trends have changed at various stages in the grammar composed in Tamil among the other languages. Grammar is about explaining those rules. The concept of individual theory develops by interpreting the structure of a language with structural order, using a specific grammatical theoretical concept for a given language over a period of time. Individualism does not operate in the context of any language, but it can construct the grammar of a language written over a period of time. The concepts of grammar are written under the categories such as, summation, type, extension, genealogy, etc., by using social, political, and academic problems to present individual theory. The interpretation of the structural order of language as a separate text without a linguistic background is consistent with the concept of individualism.

**Keywords:** Tholkappiyam, Individual Theory, Concepts of grammar, Tamil Grammar

## முன்னுரை

தமிழில் தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுதப்பட்ட இலக்கணங்கள் அனைத்தும் ஒருவகையில் பயனாக்க இலக்கணங்களே. தொல்காப்பியத்தைப் போல் சிறந்த தனிநிலைக் கோட்பாடு இலக்கணங்கள் (theoretical grammars) பிற்காலத்தில் தோன்றவில்லை (Rajaram, 2010). மேலும் தனிநிலைக் கோட்பாடு பற்றி செ.வை.சண்முகம் அவர்களின் கருத்தாக்கமும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது (Shanmugam, 2004). தமிழ் இலக்கணங்களில் தொல்காப்பியம் கூறியதில் சிறு அளவுகூட மற்ற இலக்கணங்கள் மொழியமைப்பை விளக்குவதில் வெற்றிபெறவில்லை, மொழியியல் நுட்பத்தையும் காட்டவில்லை என்று சுட்டியுள்ளதிலிருந்து ஒரு கருத்துப் பொருண்மைப் பெறப்படுகிறது (Porkai Athirai, 2021).

அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழங்கும் மொழியை, ஒரு குறிப்பிட்ட இலக்கணவியல் கோட்பாட்டு நெறிமுறைகளைப் பயன்படுத்தி மொழியின் அமைப்பை, கட்டமைப்பு ஒழுங்காக்கத்துடன் விளக்குவது தனிநிலை கோட்பாடு என்ற கருத்தாக்கம் உருவாகிறது.

தனிநிலைக்கோட்பாடு என்பது எந்தவொரு மொழியின் பின்புலத்திலும் இயங்காது, ஒரு காலகட்டத்தில் எழுதப்பட்ட ஒரு மொழியின் இலக்கணத்தினைக் கட்டமைப்பது. சமூகம், அரசியல், கல்வியியல் பிரச்சனைகள் முன்வைத்து தனிநிலை கோட்பாட்டைப் பயன்படுத்தி தொகை, வகை, விரி,

மரபாக்கம் போன்றவற்றால் இலக்கணம் எழுதப்படுவது என்ற இவ்விரு கருத்தாக்கமும் இங்கே தனிநிலைக் கோட்பாட்டிற்கு விளக்கமாகப் பெறப்படுகிறது.இக்கோட்பாட்டில் தொல்காப்பியம் எங்ஙனம் பொருந்தி வருகிறது என்பதை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

## தொல்காப்பியம்

தொல்காப்பியத்தில் தனிநிலைக் கோட்பாடு பயின்று வந்துள்ளது என்று முன்னரே கோட்பாட்டாசிரியர் சுட்டியுள்ளதால் அதனை தொல்காப்பியம் கொண்டு நிறுவி சான்றுடன் விளக்குவதாகவும் இப்பகுதி அமைகிறது.

### நூற்பா

"வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது"

"நினையுங்காலைக் காலமொடு தோன்றும்"- (Tholkappiyar, 1969)

### பொருள்

வினைச்சொல் என்பது வேற்றுமை உருபினை ஏற்காது ஆராயுங்கால் காலமொடுத் தோன்றும்.

### சான்று விளக்கம்

காலமொடு - தொகை, மரபு.

மேற்கண்ட நூற்பாவில் மரபாக்கம், தொகை என்ற பொருண்மையில் தனிநிலைக் கோட்பாடு பயின்று வந்துள்ளது. காலமொடு என்ற சொல்லின் முக்காலத்தினையும் உணர்த்தும் சொல்லாக, அச்சொல்லின் பொருண்மை அமைந்துள்ளது. மரபு என்பது வேற்றுமை கொள்ளாது காலத்துடன் தோன்றும் என்பதாம். எனவே இங்கு தனிநிலைக்கோட்பாடு இந்நூற்பாவில் பயின்று வருவதை அறியமுடிகிறது.

### நூற்பா

"காலம் தாமே மூன்றென மொழிப" (Tholkappiyar, 1969)

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா

அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்

மெய்நிலையுடைய தோன்ற லாறே" (Tholkappiyar, 1969)

"குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றும்

காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்

உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்

ஆயிருதிணைக்கு மோரன்ன உரிமையும்

அம்மூ வுருபின தோன்ற லாறே" (Tholkappiyar, 1969)

### பொருள்

- காலம் மூன்று வகைப்படும்.
- வினைச்சொற்கள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களையும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காட்டும்.

- வினைச்சொற்கள் குறிப்பாகவும் தெரிநிலையாகவும் முறையாகத் தோன்றும் காலத்தோடும் வரும். உயர்திணைக்குரியனவும், அஃறிணைக்கு உரியனவும் ஆயிரு திணைக்கும் உரியன என்று மூன்று வடிவில் வினையானது தோன்றும் என்பது மேற்கண்ட நூற்பாக்களின் பொருண்மையாகும்.

## சான்று விளக்கம்

### காலம் வகை

இறப்பு

நிகழ்வு என்பது வகை-மரபு

எதிர்வு

என்று முதல் இரண்டு நூற்பாவில் காலத்தின் வகை உணர்த்தி நிற்பதும் காலம் மூன்று வகை மரபினையுடையது என்பது இங்கு தனிநிலைக் கோட்பாடாக நிலைபேறு பெற்றுள்ளதனை அறிந்துகொள்ள முடிகிறது.

குறிப்பு

வெளிப்படை

உயர்திணை என்பது வகை-மரபு

அஃறிணை

விரவுதிணை

என்று தனிநிலைக் கோட்பாடு வகை, மரபு எனும் பொருண்மையில் பயின்று வந்துள்ளது. இங்கு மரபு எனச் சுட்டப்பெறுவது மாற்றத்திற்குட்படாதது என்றும் முன்னோர் முன்மொழிந்தது என்றும் பொருள்படும்.

## நூற்பா

"பன்மையும் ஒருமையும் பாலறி வந்த

அந்நாலைந்தும் மூன்று தலையிட்ட

முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே" (Tholkappiyar, 1969)

## பொருள்

பலர் ஆகிய பன்மையும், ஆண் பெண் ஆகிய ஒருமையும் இப்பால் உணர வந்த மேற்கூறிய இருபத்துமூன்று வினைமுற்று ஈறுகளாகிய இடைச் சொற்களும் உயர்திணையைக் குறிக்கும்.

## சான்று விளக்கம்

அந்நூல் ஐந்து என்பது தொகையுள் வகை - மரபு

மூன்று தலையிட்ட-என்பது வகையுள் விரி - மரபு

என்று மேற்கண்ட நூற்பாக்களில் தொகையினால் அதன் வகையை உணர்த்தி வினையியலில் நூற்பா 4 முதல் 6 வரை விரிந்து நிற்கின்றதை இனங்காண முடிகின்றது (அம், ஆம், எம், ஏம் என்ற இருபத்துமூன்று வினைமுற்று ஈறுகளை விளக்கி நிற்கின்றது.) உயர்திணையில் வினை முற்றுகளைக் குறிப்பிட வந்த தொகையாம். இதனுள் மரபும் இடம்பெற்றுள்ளது. இவ்விருபத்துமூன்று வகையாக உயர்திணை

வினைமுற்று தோன்றும் என்பது மரபாக்கமாகத் திகழ்கிறது. இவ்வாறு தனிநிலைக்கோட்பாடு இவற்றில் பயின்று வந்துள்ளமையை அறிந்துகொள்ள முடிகிறது.

### நூற்பா

“அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்என் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பினானும் என்று
அப்பால் காலக் குறிப்போடு தோன்றும் ” (Tholkappiyar, 1969)

### பொருள்

குறிப்பு வினைமுற்று உடைமைப் பொருளிலும், இடப்பொருளிலும், ஒப்பினாலும், பண்பினாலும் காலம் குறிப்பொடு வரும் என்றவாறு பொருள் விளக்கம் அமைந்துள்ளது.

### சான்று விளக்கம்

அப்பால் காலம் குறிப்பொடு - வகையுள், விரி

குறிப்பு வினை - வகை

உடைமைப்பொருள்

இடப்பொருள் விரி

ஒப்பினாலும்

பண்பினாலும்

அப்பால் காலம் குறிப்பொடு தோன்றும் என்று கூறியதனால் அதன் வகையை உணர்த்தி, அவ்வகையானது விரிந்து நிற்றலையும் தெளிவாக விளக்கியமையால் தனிநிலைக்கோட்பாடு இவற்றுள் பயின்று வந்துள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

### நூற்பா

“இன்றில உடைய என்னும் கிளவியும்

அன்றுடைத்தல்ல வென்னும் கிளவியும்

பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்

பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்

ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ

அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்” (Tholkappiyar, 1969)

### பொருள்

அது இன்று, அவை இல, அது அன்று, அவை அல்ல, உது உடைத்து, அவை உடைய, செயல் இனிது, யாவும் உள, முயல்கள் நெடுஞ் செவிய, அது போன்றது, அவை போல்வன எனப் பத்து நிலைகளிலும் காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் குறிப்பினால் காட்டின என்றவாறு மேற்கண்ட நூற்பாவின் பொருள் விளக்கம் அமைந்துள்ளது.

### சான்று விளக்கம்

கிளவியோடு தொகை இ-என்பது வகையுணர்த்துதல் அஃறிணையில் குறிப்பு வினைமுற்று உருவாகும் முறையினை வகைப்படுத்தி தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

வகையுணர்த்துதல் என்ற நேரடிப் பொருண்மையில் தொல்காப்பியர் தனிநிலைக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி இலக்கணவியல் கோட்பாட்டினை விளக்கியுள்ளார். மேலும் மேற்கண்ட நூற்பாவினுள் மரபாக்கம் என்ற பொருண்மையிலும் தொல்காப்பியர் தனிநிலைக் கோட்பாட்டினை கையாண்டுள்ளார் (Ilampuranar, 1982).

### நூற்பா

“பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த

அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்

காலக் கிளவி அஃறிணை மருங்கின்

மேலைக் கிளவியோடு வேறுபாடி லவே ” (Tholkappiyar, 1969)

### பொருள்

அஃறிணையில் பன்மை, ஒருமை என்ற பால் அறியவரும் குறிப்பு வினை ஈறுகள் தெரிநிலை வினைமுற்றுக்களே மரபின்படி வரும். வினை ஈற்று இடைச் சொற்களில் முன்பு கூறிய நிலையில் அமையும் வேறுபாடில்லை என்றவாறு மேற்கண்ட நூற்பாவின் பொருள் விளக்கம் அமைந்துள்ளது.

### சான்று விளக்கம்

அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்

அஃறிணை மருங்கின் - மரபு உணர்த்துதல்

அஃறிணையில் குறிப்பு ஈறுகள் தெரிநிலை வினைமுற்றுக்களோடு மரபு படி வரும் என தொல்காப்பியர் நேரடிப் பொருண்மையில் மரபினை பயன்படுத்தியுள்ளார். மேலும் வினைஈற்றுச் சொற்கள் முன்பு கூறிய நிலையில் அமையும் என மரபாக்கம் வழி விளக்கியுள்ளார். இந்நூற்பாவினுள் மரபாக்கம் என்ற பொருண்மையில் தொல்காப்பியர் தனிநிலைக் கோட்பாட்டினைக் கையாண்டுள்ளார்.

### நூற்பா

“முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி

இன்மை செப்பல் வேறென் கிளவி

செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னும்

அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்

திரிபு வேறுபடூஉஞ் செய்திய வாகி

இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய” (Tholkappiyar, 1969)

### பொருள்

முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி, இன்மை செப்பல், வேறு, செய்ம்மன, செய்யும், செய்த ஆகிய எட்டு வினை வடிவங்களும் உயர்திணைக்கும், அஃறிணைக்கும் உரிய விரவுவினை

வடிவங்களாக அமையும். பிரிந்துநின்று உயர்திணை அஃறிணைகளைக் காட்டும் என்பது நூற்பாவின் பொருள் விளக்கம்.

## சான்று விளக்கம்

ஆயெண் கிளவி

இருதிணை சொற்கும் - என்பது தொகை, தொகை விரி

முன்னிலை, வியங்கோள்

வினையெஞ்சு கிளவி

இன்மை செப்பல் - என்பது பிற வினையின் வகை, விரி, மரபு.

வேறென் கிளவி

செய்ம்மன செய்யும் செய்த

ஆயெண் கிளவி என்பது எட்டு வகையான விரவு வினைச் சொற்களின் வகைப்பாட்டினைச் சுமந்தும், இருதிணை என்பது உயர்திணை, அஃறிணை எனும் இரண்டு திணைகளையும் குறிக்கும் பொதுக் குறியீட்டுச் சொல்லாகவும் விளங்குகின்றது.

மேற்சுட்டிய எட்டும் விரவு வினையின் வகையுணர்த்தி நேரடிப் பொருண்மையில் தனிநிலைக் கோட்பாட்டில் பயணிக்கிறது. இவ்விரண்டுமே மரபினைச் சார்ந்ததாகவும் விளங்குகிறது என்பது சான்றோர் இலக்கணத் துணிபு. எனவே ஈண்டிங்கு தொல்காப்பியர் தனிநிலைக் கோட்பாட்டினை மூன்று நிலைகளிலும் கையாண்டுள்ளமையை இதன்வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

தொல்காப்பியம் பயனாக்க இலக்கணவியல் கோட்பாட்டில் சுட்டியவாறு தொகை, வகை, வரி, மரபாக்கம் என்ற நிலைகளில் தனிநிலைக் கோட்பாட்டினை தன்னுள் கொண்டுள்ளது.தொல்காப்பியம் எந்தவொரு மொழியின் பின்புலமும் இன்றி தனியொரு நூலாக நின்று மொழியின் கட்டமைப்பு ஒழுங்காக்கத்தினை விளக்குவது தனிநிலைக் கோட்பாடு என்ற கருத்தியலுடன் முழுவதும் ஒத்துப்போகும் நிலையை அறியமுடிகிறது.

## References


Ilampuranar, (1982) Tholkappiyam porulathikaram, South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunelveli, India.

Porkai Athirai, C., (2021). Tholkappiyar's meyppadu and Bharathar's Rasa – Concepts of Aesthetics. International Research Journal of Tamil, 3(3), 47-52. https://doi.org/10.34256/irjt2136

Rajaram, S, (2010) Ilakkanaviyal Meekkotpadum Kotpadugalum, Kalacuvadu Pathipagam, Nagarkovil, India

Shanmugam, S.V., (2004) Ilakkana Aayvu, Meyappan Pathippagam, Chithambaram, India

Tholkappiyar, (1969) Tholkappiyam, Saiva siththantha Nurpathippu Kazhagam, Thirunelveli, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License